2002 ஏப்ரல் 3]

இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு.பெ. சாமிநாதன்: பேரவைத் தலைவரவர்களே, ஒரு நிமிடம் தாருங்கள். அமைச்சர் தவறான தகவலைத் தருகிறார். நான் ஒரு விளக்கத்தைச் சொல்லி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம். விவாதத்திற்கு இடம் இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இது கேள்வி நேரம். உள்ளாட்சித் துறை அமைச்சர் அடுத்த கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்.

வினா எண் 73, திரு. எ.வ. வேலு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

73—

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல்

***2820—திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக ஊராட்சி உள்ள ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திருவண்ணாமலை ஒன்றியம் எப்போது இரண்டாகப் பிரிக்கப்பட உள்ளது?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிப்பது குறித்த செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருவண்ணாமலை ஒன்றியத்தில் 69 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அதற்கு 26 ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்திலேகூட ஜவ்வாதுமலை ஒன்றியம் என்ற

ஓர் ஒன்றியம் உண்டு. அதற்கு ஒன்றிய கவுன்சில் ஏழுதான் இருக்கிறது. அதற்குத் தனியாக ஒன்றியம் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே, 26 ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களையும், 69 ஊராட்சி ஒன்றிய மன்றங்களையும் உள்ளடக்கி இருக்கிற திருவண்ணாமலை ஒன்றியம் மிகப் பெரிய ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டத்திலேயே. சென்றமுறை இருந்த எங்களுடைய அரசிலே மனு கொடுத்து, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எடுக்கப்படுகிற காரணத்தால் இப்போது பிரிக்க முடியாது, மீண்டும் பிரிக்கிறோம் என்று சொன்னார்கள். ஒன்றியக் கவுன்சிலிலேயே தீர்மானம் போடப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிந்துரை செய்யப்பட்டு, இயக்குநர் அலுவலகத்திற்கு வந்து, இயக்குநர் அவர்களும் பதில் கொடுக்கிறபோது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இந்த ஆண்டு எடுக்கிற காரணத்தால் அது முடிந்தவுடன் பிரித்துத் தருகிறோம் என்று எங்களுக்குப் பதில் அனுப்பி இருக்கிறார்கள். எனவே மீண்டும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி 69 ஊராட்சி மன்றங்கள் இருக்கிற காரணத்தினாலும், 26 ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் இருக்கிற காரணத்தினாலும், அதை இரண்டாகப் பிரித்துத் தர இந்த அரசு முன் வருமா என அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2001 ஆம் ஆண்டுதான் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பிறகு மக்கள் பிரதிநிதிகள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளினுடைய பிரதிநிதிகளாகச் செயல்பட்டு வருகிறார்கள். எனவே தனியாகப் பிரிக்கின்றபோது நிர்வாக ரீதியாக சிக்கல்கள் ஏற்படலாம். அதற்காக அரசு நிதியும், செலவினமும் ஏற்படும். எனவே இப்போது பிரிப்பதற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. தேர்தல் முடிந்துவிட்டது. அதனால் பிரிக்க முடியாது என்று சொல்லிவிட்டார். இனிமேல் நீங்கள் ஒவ்வொன்றையும் கேட்டு என்ன செய்வது?

வினா எண் 74, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.